

# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

"....கர்த்தரே உனக்கு நித்திய
வெளிச்சமாயிருப்பார்
உன் துக்க நாட்கள் முடிந்துபோம்"
(ஏசாயா 60:20)

இதழ் - 38, தை 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாலிபன்
# VAALIPAN

**பிரியமுள்ள 'வாலிபன்'**
**வாசகர்களுக்கு!**

இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

கடந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் இவ் ஊழியத்தை அதிசயவிதமாய் வழிநடத்திக்கொண்டு வந்திருக்கிறார். இப்புதிய ஆண்டிலும் இவ் ஊழியமானது மென்மேலும் வளர்ச்சியடையவும், ஆசீர்வதிக்கப்படவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

கடந்த வருட இறுதியில் (2010 டிசெம்பர்) 'வாலிபன்' ஊழியங்கள் சார்பாக பரந்தன் சென்று அங்குள்ள மக்களுக்காக ஆடைகளை வழங்க தேவன் கிருபை செய்தார். இதற்காக உதவிகள் நல்கிய உங்கள் ஒவ்வொருவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இப்புதிய ஆண்டானது சுயநலமும், களியாட்டமும் நிறைந்த ஆண்டாக எம் வாழ்வில் மாறிவிடாமல், எல்லா மனுஷருக்காகவும் விசேஷமாக வடக்கு பிரதேச மக்களுக்காக விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணும் ஆண்டாக இருக்க வேண்டும் என்பதே எமது வாஞ்சை! இதற்காக வாசகர்களாகிய நீங்கள் அனைவரும் ஜெபத்திலே தாங்கிக்கொள்ளுங்கள்.

கர்த்தர் தாமே உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையின்று விலக்கிக் காத்துக்கொள்வாராக!

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

**கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்.... 9**

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

**ஜோ**ன் வெஸ்லி ஆழமான பக்தியுடன் வாழாத ஒரு கட்டத்தில் ஒரு தடவை அவரது கல்லூரியிலிருந்த 'கிங்ஸிலி' எனும் காவற்காரன் தன்னுடைய எளிய பக்தியின் மூலமாகவும், வஞ்சனையற்ற வாழ்க்கையின் மூலமாகவும் வெஸ்லியின் மனச்சாட்சியை உருவக்குத்தினான். ஒரு நாள் இரவு அக்காவற்காரனோடு வெஸ்லி அசிரத்தையோடு உரையாடிக் கொண்டிருந்தார். "நீ உன் வீட்டிற்குப் போய் வேறு ஒரு சட்டையை அணிந்துகொள்" என வெஸ்லி அவனிடம் கூறினார். அவனோ "இவ்வுலகில் எனக்கு இந்த ஒரு சட்டை மாத்திரமே உண்டு. அதற்காக தேவனைத் துதிக்கிறேன்" என்றான். திரும்பவும் வெஸ்லி "சரி, உன் வீட்டிற்குப் போய் இரவு ஆகாரத்தைச் சாப்பிடு" என்றார். அவனோ " தினமும் மத்தியானத்தில்தான் நான் சாப்பிடுகிறேன். இரவில் தண்ணீர்தான் குடிப்பேன். நான் திருப்தியாகத்தான் சாப்பிடுகிறேன். இதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன் என்றான்.

திரும்பவும் வெஸ்லி "இந்தக் குளிர்காலத்தில் உனக்குப் படுக்க நல்ல மெத்தை இருக்கின்றதா?" எனக் கேட்டார். உடனே அவன் "கிடையாது, நல்ல இந்தப் பலகை இருப்பதற்காக ஆண்டவரைத் துதிக்கிறேன்" என்றான். உடனே வெஸ்லி "ஐயோ இதற்காக யாராவது துதிப்பார்களா? சரி கிங்ஸிலி, உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்க இடமும் இல்லாவிட்டாலும் நீ கிறிஸ்துவைத் துதிக்கின்றாய்! இன்னும் எவற்றுக்கெல்லாம் நீ அவரைத் துதிப்பாய்?" எனக் கேட்டார். உடனே அக்காவற்காரன் "பாவியாகிய என்னை நேசித்து, தன்னுடைய ஒரே குமாரனை அனுப்பின தேவனுடைய அன்பிற்காக அவரைத் துதிக்கிறேன். எனக்கு வாழ்வை ஈந்ததற்காகவும், தேவனை நேசிக்கும்படியான ஓர் இருதயத்தையும், அவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்ற வாஞ்சையையும் எனக்குத் தந்ததற்காகவும் நான் அவரை முழு இருதயத்தோடும் துதிப்பேன்" எனப் பதிலளித்தான்.

ஜோன் வெஸ்லியின் இருதயத்தில் இந்த வார்த்தைகள் ஆழமாகப் பதிந்தன. அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்! தன்னிடமில்லாதிருந்த ஏதோ ஒன்று இந்த மனிதனுடைய பக்தியில் இருக்கிறதென்பதை அவர் அறிந்துகொண்டார். இந்த மாதிரியான ஆவிக்குரிய ஜீவியம் தனக்குள் கிடையவே கிடையாது என்பதை அவர் தெளிவாக விளங்கிக் கொண்டார்.

ஜோன் வெஸ்லி போதக ஊழியத்தில் சேரவிரும்பி, அதைக் குறித்து தன் தகப்பனாருக்குத் தெரிவித்த பொழுது அவர் "வயிற்றுப் பிழைப்புக்காக ஏலியின் புதல்வர்களைப் போல ஊழியத்தை நீ தெரிந்து கொள்ளாதே" எனப் பதிலெழுதிவிட்டார். ஆனால் தாய் சூசன்னாளோ தனது மகனுடைய கடிதத்தை வாசித்துவிட்டு அவனிடம் மாறுதல் ஏற்பட்டுள்ளது என்பதை உணர்ந்து ஒரு சரியான பதிலை எழுதினார். "வாழ்வின் மிக முக்கியமான தேவையை அசட்டை செய்துவிட்டு, முக்கியமில்லாத வற்றைப் படிப்பதற்காக உன் நேரத்தைச் செலவிடும்படியான பெரும் தீங்கினின்று உன்னைக் காக்கும்படிக்யாக நான் கருத்தாகக் கிறிஸ்துவை மன்றாடுகிறேன். கிறிஸ்து உன்னை முற்றிலும் இரட்சித்துவிட்டாரென்ற நிச்சயம் உன்னிலிருக்க வேண்டுமென விரும்புகிறேன். அவ்விதமான நிச்சயம் உனக்குள் இருக்குமாயின், உன்னுடைய பாடுகளுக்கேற்றபடி அளவுகடந்த ஆசீர்வாதங்களை நீ பெற்றுக்கொள்வாய்" என்று கடிதமெழுதினார்.

**(வெஸ்லி மீண்டும் வருவார்.....)**

## கிறிஸ்துவுக்காக..........

கிறிஸ்துவுக்காய்ப் பாடிடுவேன் - அவரண்டை
கிட்டி நானும் சேர்ந்திடுவேன்
கிடையாகக் கிடந்த என்னை
கிட்ட வந்து தூக்கினாரே

பாரோர்க்காய் இவ்வுலகில் - மரி
பாலகனாய் வந்துதித்தார்
பாவிகளை மீட்டிடவே - இப்
பாரினிலே அவதரித்தார் - என்றும்
பாடிடுவேன் அவர் புகழை!

ஜெ.ஜேம்ஸ் சர்வானந்தன்
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றுகிறவர்

பிறந்திருக்கும் புதிய ஆண்டு எப்படிப்பட்டதாய் அமையுமோ என்று சிந்திக்கின்ற சகோதரனே! சகோதரியே! 2011 ஆம் ஆண்டைக் குறித்து திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றக் காத்திருக்கும் வாலிபர்களே! பெரியவர்களே!

"இருக்கிறவராகவே இருக்கிறேன்" (யாத். 3:14) என்று வாக்களித்தவர் இப் புதிய ஆண்டிலும் எமக்கு ஞாபகப்படுத்துகிற வார்த்தை **"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண் 23:19)**

மனச்சோர்வு, கவலை, கண்ணீர், போராட்டம் நிறைந்ததாய் கடந்த ஆண்டு எமக்கு அமைந்திருக்கலாம். ஆனால், இப் புதிய ஆண்டிலே மிண்டும் ஒருமுறை சர்வ வல்லவர் எமக்குத் தரும் மாறாத வார்த்தை **"நிறைவேற்றுவேன்"** என்பதே!

கர்த்தர் செய்வேன் என்று எமக்கு கூறிவிட்டு மறந்து விடுபவர் அல்ல; தூங்குகிறவரும் அல்ல! அவர் எல்லாவற்றையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்கிறவர். (பிரசங்கி 3:11); அவர் செய்ய நினைத்த காரியம் தடைப்பட்டுப் போவதுமில்லை (யோபு 42:2); கூறிய காரியத்தைத் திருத்தி வேறு காரியத்தைச் செய்பவருமல்ல. (யோபு 33:14)

வார்த்தைகளும், பலரது வாழ்க்கையும் இதற்குச் சாட்சிகளாய் இருப்பது போல எனது வழ்க்கையும் ஒரு சாட்சியே!!

கடந்த ஆண்டு பிறக்கின்ற போதே என்னைப் பதனிடும் வண்ணமே போராட்டங்களோடு பிறந்தது. "ஏன்?" என்ற வினா ஒவ்வொரு செக்கனும் எழுந்தாலும் விடை காண வழியே இல்லாத நிலை. அந்த நாட்களிலும் கூட என் நேசர் இயேசுக் கிறிஸ்து எனக்கு திரும்பத் திரும்ப ஞாபகப் படுத்திய வார்த்தைகளே இவ்வார்த்தைகள்.

வருடத்தின் நடுப்பகுதியில் ஆண்டவர் உறுதிப்படுத்தி, உறுதியாய் கூறியது, "உன்னைச் சுற்றியிருப்போர் மத்தியில் நான் உனக்குச் செய்யப்போகும் காரியத்தால், நீ எனக்காகவே காத்திருந்தாய். நானே உனக்கு இதைச் செய்கிறேன் என்று அறிந்து கொள்வார்கள்". ஆண்டவருக்கே சகல துதியும் கனமும் ஸ்தோத்திரமும் உரித்தாகுக.

கிறிஸ்துவின் வருகைக்காக நாம் காத்திருக்கும் இந்த நாட்களில், அவருக்காக வாழ்கின்ற உனக்கு/ உங்களுக்கு உபத்திரவங்கள் அதிகமதிகமாகவே எதிர்ப்படும். ஆனாலும் ஜீவனுள்ள தேவன் எமக்குத் தந்த வாக்குத்தத்தங்களை நிச்சயம் நிறைவேற்றுவார். அவர் எப்போதும் மாறாதவரே!

கர்த்தரையே நம்பி வாழ்கின்றவர்களது வாழ்க்கையில் எல்லாவற்றையும் நிறைவேற்றி முடித்திருப்பவர், அடியவள் என் வாழ்க்கையிலும் நிறைவேற்றுவது அதிக நிச்சயம் அல்லவா??

சோர்ந்து போகாமல் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்து காத்திருங்கள்... நிச்சயம் சர்வ வல்லவர் உங்களுக்கான சகலவற்றையும் நிறைவேற்றுவார்.

சகோதரி :
R.நியோமி கஜாவினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாலிபரும் உலக சந்தோஷமும்

விஞ்ஞான வளர்ச்சி நிறைந்த உலகில் இன்றைய வாலிபர்கள் தன்னைச் சிருஷ்டித்த சிருஷ்டிகரின் நினைவுபற்றி சிந்திக்கவே நேரமின்றி நவீன யுகத்தோடு கலந்துவிட்ட னர். வாலிபராகிய நாம் உலகத்தோடும் அதன் மாயையோடும் போய்க்கொண்டிருக்கின்றோமா?

"நீ உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" என பிரசங்கி 12ம் அதிகாரத்தில் காண்கின்றோம். ஒவ்வொரு வாலிபனும் முழுமனதுடன் சத்திய வார்த்தைகளை கைக்கொண்டு நித்திய இன்பத்தை அடையவேண்டும் என்ற வாஞ்சையில்தான் தேவன் நம்மை அழைத்திருக்கின்றார். ஒரு கிறிஸ்தவ குருவானவர் சில துறவிகளைச் சந்தித்தார். அதில் ஒரு துறவி குருவானவரிடம், "ஒருவன் தன் இல்லற வாழ்வின் இன்பங்கள் எல்லாம் அனுபவித்த பின் வயோதிபத்தில் தான் கடவுளைத்தேட வேண்டும்" என்று கூறினார்.

அதற்கு கிறிஸ்தவ குருவானவர் "உம் சீடரில் ஒருவன் நன்றாகப் பழுத்த மாம்பழத்தைக் கொடாமல் சாரம்போன தோலையும் அதன் விதையையும் உமக்குக் கொடுத்தால் என்ன சொல்வீர்?" எனக் கேட்டார். அதற்கு அவர், "என்னைக் கேவலப்படுத்துவதும் மன்னிக்க முடியாததுமான செய்கை" என்றார். அதற்கு கிறிஸ்தவ குருவானவர் பிரதியுத்திரமாக நமது வாலிப பிராயத்தில் சிற்றின்பங்களைக் கழித்து வயோதிபத்தில் நமது தோலைக் கடவுளுக்குக் கொடுப்பதும் கேவலப்படுத்துவதும் மன்னிக்க முடியாததுமல்லவா? என கூறினாராம்.

சுறுசுறுப்பான வாலிபப் பிராயத்திலே கடவுளுக்காக வாழ்பவர்கள் பாக்கியவான்கள். வாலிப பிராயம் ஆற்றல், ஆளுமை என்பவற்றின் எழுச்சி முழுமையடையும் காலம். ஏனென்றால் உற்சாகமாக உழைப்பவர்கள், கர்த்தருக்குக் காத்திருக்கின்ற இளைஞர்கள் சோர்வடைந்து போக மாட்டார்கள்... எனவே, வாலிபப் பிராயத்தில் முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பது எவ்வளவு பெரிய சலாக்கியம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளுதல் அவசியமாகும்.

வாலிபப்பிராயத்தில் உலகத்தை அனுபவிக்காவிட்டால் எப்போது அனுபவிப்பது எனச் சிலர் எண்ணலாம். ஆனால் பிரசங்கி "மாயை மாயை எல்லாம் மாயை" என்று கூறுகின்றார். தான் வாழ்வது பாவத்தில் எனத் தெரிந்தும் விடுதலை பெற முடியவில்லையே என பல வாலிபர்கள் ஏங்குகின்றார்கள். ஆகவே, வாலிப பிராயத்தில் கர்த்தருக்குள் ஜீவிப்பதற்கு வாலிபர்களாகிய நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

இன்றே அவர் அழைப்பதற்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது நம் கடமையாகும்.

S.D.D.ரம்யா
வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி பாலகன் பிறப்பது எந்நாளோ?

மாடடைக் குடிதனில் மானிடர்க்காய் பிறந்து
நன்மைகளையே தன்வாழ்வாய் வாழ்ந்து
நானிலம் போற்றும் வார்த்தைகளை வார்த்த
வள்ளலின் வார்த்தைகளை வாழ்வது எந்நாளோ?

மானிடத்தை மீட்க மண்மீது மனுவாகி
மாண்பு மிகு வாழ்க்கையால் அனைவரையும் மன்னித்து
மானிடரால் வந்த துயர்களை இறைதிருவுளமென ஏற்ற
ஏந்தலின் ஏழ்மையை எண்ணுவது எந்நாளோ?

சிறுவயதினில் ஞானத்தில் சிறந்து
கூசை தன் தந்தையுடன் தொழில்புரிந்த
தான் பிறந்த குலமே பெருமைப்பட திகழ்ந்த
இயேசுவின் சுவடுகளை தொடர்வது எந்நாளோ?

அன்பினை அடிப்படையாகக் கொண்ட அண்ணலின்
ஞான வார்த்தைகளில் எம்வாழ்க்கையை நிறுத்தி – அவரின்
உண்மைப் பாதையில் எம்சிரத்தை செலுத்தினால் நாம்
ஆசைப்படும் அமைதி பாலகன் எம் உள்ளங்களில்பிறப்பது அந்நாளே!!!

சகோதரி : **தயா**
முறக்கொட்டான்சேனை.

கர்த்தரின் செய்கைகள்
பெரியவைகளும், அவைகளில்
பிரியப்படுகிற எல்லாராலும்
ஆராயப்படுகிறவைகளுமாய்
இருக்கிறது. - (சங்.111:2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானம்!

**வேதத்திலே** தீர்மானம் செய்த மூன்று நபர்களை உங்களுக்கு முன்பாக நிறுத்த விரும்புகிறேன். முதலாவதாக, யாக்கோபின் தீர்மானம். இது தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லுகிற நிபந்தனையோடு கூடிய தீர்மானம். தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து என் தகப்பன் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால் கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணிக்கொண்டான்" (ஆதியாகமம் 28:20–22). ஆனால் நீங்கள் நிபந்தனைகளோடு அல்ல, தேவ அன்பினால் நிறைந்து, உங்களுக்குக் கொடுத்திருக்கிற நல்ல ஈவுகளை எண்ணி, கர்த்தருக்கு தசமபாகம் கொடுக்க வேண்டும்.

இரண்டாவது, தாவீதைப் போல வேத வசனங்களை வாசிப்பேன். தியானிப்பேன், செயல்படுத்துவேன் என்று தீர்மானியுங்கள். "உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்" (சங்கீதம் 119:15,16) ஆம்! தேவனுடைய பிள்ளைகளே, வேதத்தை வாசித்து தியானித்து அதன்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் நிச்சயமாகவே பாக்கியவான்களாய் விளங்குவார்கள். வேத வசனங்களைத் தியானிக்க வேண்டியது ஒவ்வொருவர்மேலும் விழுந்த கடமை. இந்தக் கடமையை சரியாய் நாம் செய்யும் பொழுது தேவன், தாவீதுக்கு அருளின நித்தியமான கிருபைகளை உங்களுக்கும் அருளுவார்.

மூன்றாவது தானியேலின் தீர்மானம், பரிசுத்த வாழ்க்கைக்கான தீர்மானம்."ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்த லாகாது என்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான்" (தானியேல் 1:8). இன்றைக்கு உங்களுடைய தீர்மானங்கள் என்ன? தேவனுடைய பிள்ளைகளே, உலகத்தின் காரியங்களினால் உங்கள் இருதயத் தைத் தீட்டுப்படுத்தாமல், தானியேலைப் போல பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்து அவருக்கு ஊழியம் செய்வதைக் குறித்து தீர்மானம் எடுத்து, கர்த்தரோடு நெருங்கி வாழுங்கள்.

**கர்த்தர் தாமே இப் புதிய ஆண்டிலும் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!**

**மூலம் : இணையம்.**

## கவிதைப்போட்டி - 24

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**இறுதித் திகதி**
**31.01.2011**

**"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்?...." - (சங்.119:9)**

## கவிதைப் போட்டி - 23 ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"உன் விண்ணபத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன்..."**
**(ஏசா.38:5)**

விண்ணப்பத்தைக் கேட்டு - எனக்கு
விடுதலை தந்தவரே
கண்ணீரைத் துடைத்து - என்
காயங்கள் ஆற்றினீரே
என்றும் உம்மைத் துதித்திடுவேன் என் நேசரே!

- ஜீர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி - 37

உருவாக்கம் : J.சேரா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | ■ | 2 | | 3 | ■ | 4 |
| 5 | | ■ | | ■ | 6 | | |
| 7 | | 8 | | | | ■ | ■ |
| 9 | | | | ■ | ■ | ■ | ■ |
| | ■ | 10 | | | 11 | ■ | ■ |
| ■ | 12 | ■ | | ■ | 13 | 14 | 15 |
| 16 | | | | 17 | ■ | 18 | |
| 19 | | ■ | 20 | | | ■ | |

## இடமிருந்து வலம்

02. இதன் தண்ணீரண்டையிலே இஸ்ரவேலர் கர்த்தரோடே வாக்குவாதம் பண்ணினர். (குழம்பியுள்ளது).
05. லேயாளின் வேலைக்காரி சில்பாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரரில் ஒருவன். (நடு எழுத்தில்லை)
06. மோசே இது உள்ளவன் என்று தேவனே அவனைக் குறித்து சாட்சி கொடுத்தார். (உதவி - எண்ணாகமம்)
07. குளிருமற்ற, அனலுமற்ற சபை.
09. 30 வெள்ளிக்காசினால் கொள்ளப்பட்ட நிலம் இவனுடையது. (குழம்பியுள்ளது)
10. பேதுரு இயேசுவை இப்படி அறிக்கையிட்டான். (குழம்பியுள்ளது).
13. போதுமென்கிற இதனுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். (உதவி : 1 தீமோத்தேயு)
16. எங்களுக்குள் இருக்கிறவர் இப்படிப்பட்டவர். (உதவி 1 யோவான்)
18. நிக்கோதேமு இயேசுவிடம் வந்த நேரம். (கடைசி எழுத்தில்லை)
19. தாகமுள்ளவன்மேல் இதை ஊற்றுவேன் என்றார் தேவன். (திரும்பியுள்ளது - கடைசி 2 எழுத்துக்களுமில்லை)
20. இயேசுவுக்கு அன்பான சீடன் திரும்பியுள்ளான்.

## மேலிருந்து கீழ்

01. எகிப்தின் ராஜா.
02. அருவருப்பான செட்டைகளுடையவன். (உதவி : தானியேல்)
03. இவனுடைய மனைவி பின்னர் தாவீதின் மனைவியானாள். (குழம்பியுள்ளது)
04. கடைசி எக்காளம் தொனிக்கையில் நாம் ...............பொழுதிலே மறுரூபமாகுவோம். (உதவி : 1 கொரிந்தியர்)
05. எமது சரீரம் தேவனுடைய இது என்கிறார் பவுல்.
08. மகா ரூபவதியான ராஜஸ்திரீ குழம்பியுள்ளாள்.
11. கழுதைக் குட்டியாகிய இதன்மேல் இயேசு ஏறி வந்தார். (தலைகீழ்)
12. மேதிய ராஜா (தலைகீழ்)
14. ஆபிரகாம் தன்னுடைய இதனைச் சேர்ந்தவரிடத்தில் ஈசாக்கிற்குப் பெண் கொண்டான். (கடைசி எழுத்தில்லை-தலைகீழ்)
15. தண்ணீர் மொண்டு கொள்ளுமிடம்.
16. தேவனின் சிருஷ்டிப்பு ஒன்று.
17. இயேசுவை இதினால் அடித்தனர். (தலைகீழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ம்மநா (நாமம்)
03. ருதீ (தீரு)
05. ள்தாத்ர்மா (மார்த்தாள்)
08. பாவி
09. கசக்ம்ர (சக்கரம்)
11. க்ம்துக (துக்கம்)
13. த்கா (காத்)
14. ல்யேரிபிகா (காபிரியேல்)
16. ள்பால்சி (சில்பாள்)
17. ரைநா (நாரை)
18. மான்

**மேலிருந்து கீழ்**

01. ம்ணபா (பாணம்)
02. நாள்
03. ருத்சது (சத்துரு)
04. தீர்க்கதரிசி
05. தாகம்
07. மாம் {மாம்(சம்)}
10. ரலைக்காவேன் (வேலைக்காரன்)
12. முத்திரை
14. ல்பா (பால்)
15. யேல்னி {(தா)னியேல்}

குறுக்கெழுத்துப் போட்டி 36க்கான சரியான விடை எவராலும் அனுப்பப்படவில்லை

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 37ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 31.01.2011**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 37
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.

# சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி - 29

1) யோவான் எங்கிருக்கும் போது கிறிஸ்துவின் வருகையின் விசேஷம் வெளிப்பட்டது?

..................................................

2) ஆசியாவிலுள்ள எந்தெந்த சபைகளுக்கு அனுப்பும்படி விசேஷம் வெளிப்படுத்தப்பட்டது?

..................................................

3) 'வாந்தி பண்ணிப் போடுவேன்' என்று கிறிஸ்து கூறிய சபை எது?

..................................................

4) ஜீவ விருட்சத்தின் கனி யாருக்கு புசிக்கக் கொடுக்கப்படும்?

..................................................

5) 'ஆதியிலே கொண்ட அன்பை விட்டாய்' என்று கூறப்பட்ட சபை எது?

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா விடைப் போட்டி
28 இற்கான விடைகள்

1) ஊத்ஸ்
2) சூகியனான பில்தாத்
நாகமாத்தியனான சோப்பார்
தேமானியனான எலிப்பாஸ்
3) மூன்று
4) தேவன் நம்மோடிருக்கிறார்
5) வெண்வஸ்திரம்

வினா விடைப் போட்டி
28 இற்கான சரியான
விடைகள்
கிடைக்கப்பெறவில்லை.

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
☞ வினா விடைப்போட்டி 29 இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **31.01.2011**

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
வினாவிடைப் போட்டி - 29
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# ஜீவனும் மரணமும் - J.சேரா

**"இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்" – (உபா. 30:15)**

இன்றைய உலகில் நாம் நமது வாழ்க்கை, வழிகள், அன்றாட காரியங்கள் என்று பலவற்றையும் குறித்து தெரிவுகளை மேற்கொள்கிறவர்களாகவும் முடிவுகளை எடுக்கிறவர்களாகவும் இருக்கிறோம். ஒருவருடைய தெரிவும் முடிவும் ஆசீர்வாதத்தையும், இன்னொருவருடைய தெரிவு சாபத்தையும் கொண்டு வருவதாய் இருக்கிறது. அதன் காரணம், தேவன் ஜீவனுக்குரிய வழியையும் மரணத்துக்குரிய வழியையும் உலகில் வைத்திருக்கிறார். ஆனால் தெரிவு நம்முடையதே. இதைத்தான் தெரிவுசெய்ய வேண்டும் என்று எங்களை தேவன் வற்புறுத்தவில்லை. மாறாக, எங்களை எச்சரிக்கிறார். ஜீவனுக்குரிய வழியைத் தெரிவு செய்தால் நன்மையையும், மரணத்துக்குரிய வழியைத் தெரிவு செய்தால் தீமையையும் அனுபவிப்பாய் என எச்சரிக்கிறார். தேவன் ஆதாமுக்கு "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி.2:17) என கட்டளையிட்டார். ஆகவே, தெரிவு ஆதாமுடையது. ஆனால் தேவன் எச்சரித்தார். இருந்தும் ஆதாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாது மரணத்துக்குரிய வழியை தெரிவு செய்தான். அதனால் இவ்வுலகுக்குப் பாவம் வந்தது. பாவத்தால் மரணமும் வந்தது. ஆகவே நம்முடைய தெரிவிலேயே ஆசீர்வாதமும் சாபமும் இருக்கிறது.

ஆகவே, நாம் நம்முடைய தெரிவைக் குறித்து மிகவும் எச்சரிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் இவ்வுலகில் மாயையான பலதும் நமக்கு மகிழ்ச்சியைத் தருவதுபோல் இருந்தாலும் இறுதியில் பாதாளத்துக்குள் தள்ளுகிறதாகவே இருக்கிறது. இதைத்தான் பவுல் சொல்கிறார், "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியிராது" (1 கொரி. 6:12). ஆகவே, தேவன் நம்மை அவரது வேதத்தினூடாகவும் கற்பனைகளினூடாகவும் கட்டளைகளினூடாகவும் நம்மை எச்சரிக்கிறார். நமக்கு சரியான வழியையும் காட்டுகிறார். ஆகவே நாம் அவைகளை நம் இருதயத்தில் பதித்து அதற்கேற்ப எமது தெரிவுகளை மேற்கொள்ளும் போது அது தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கிறது. "நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து அவர் சத்தத்திற்கு செவிகொடுத்து அவரைப் பற்றிக்கொள்வாயாக" (உபா 30:19-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேதமும் விஞ்ஞானமும்

இன்று உலகில் பிரமிப்புடன் பேசப்பட்டுவருகிற விடயங்ளில் முக்கியமானதொன்று பறக்கும் தட்டு. இது கடந்த 50 வருடங்களாக பலரை வியப்பில் ஆழ்த்திக்கொண்டிருக்கின்றது. இந்தப் பறக்கும் தட்டுக்கள் இதுவரையிலும் அடையாளங்காணப்படாத விசித்திரமான பொருள். இவைகள் எங்கிருந்து வருகின்றன, மீண்டும் எங்கு செல்கின்றன என்பதை ஒருவராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆனாலும் இந்தப் பறக்கும் தட்டுக்களைப் பற்றி பலர் உலகில் பல்வேறு இடங்களிலிருந்தும் சாட்சி கூறியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கிட்டத்தட்ட ஒன்றையே கூறியிருக்கிறார்கள்; **"வட்டவடிவத் தட்டு அல்லது தட்டுக்கள். தமது மையம் பற்றி அதிவேமாக சுற்றிக்கொண்டிருந்தன. தட்டுக்களின் பரிதியில் பல வர்ண விளக்குகள் இருந்தன. பறக்கும் தட்டுக்களின் சத்தம் பெரும் இரைச்சலைப் போலிருந்தன. அத்தட்டுக்களிலிருந்து பெரும் ஒளிக்கற்றைகள் பூமிக்கு வந்தன. அந்தப் பறக்கும் தட்டு ஒரு நீலநிறப் பிரகாசமான ஒளித்தட்டுப் போலிருந்தது. மின்னலைப் போல் ஆகாயத்துக்குள் சென்று மறைந்து போயின".**

இந்தப் பறக்கும் தட்டைக் குறித்து ஆராய்ச்சியாளர்களின் கருத்து, பூமியில் மாத்திரமல்ல, வேறு கிரகங்களிலும் உயிரினங்கள் இருக்க வேண்டும். அங்கிருந்தே இவைகள் வருகின்றன என்பதே. இதனால் மனிதன் இன்று விஞ்ஞானத்துக்கு முதலிடம் கொடுத்து, இதை அறிவதற்கு ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறான். வேதத்தையோ புறந்தள்ளுகிறான். ஏனெனில் தேவன் பூமியிலே மாத்திரம் உயிரினங்களை சிருஷ்டித்தார் என்று வேதத்தில் சொல்லப்படுகிறது. சிலவேளைகளில் சில கிறிஸ்தவர்கள் கூட வேதத்திலிருக்கிற எல்லா வார்த்தைகளும் உண்மையல்ல என நினைப்பதுண்டு. இவ்வுலகின் மாயைகளினாலும் விஞ்ஞானத்தின் விந்தைகளினாலும் விசுவாசத்தை அவர்கள் இழந்து விடுகிறார்கள். இது இப்படியிருக்க, இப்போது நாம் பறக்கும் தட்டுக்கள் அல்லது இவற்றுக்கு ஒப்பான எதையாகிலும் ஒன்றைப்பற்றி வேதத்தில் சொல்லியிருக்கிறதா என்று பார்ப்போம்.

"இதோ! பூமியில் ஜீவன்களண்டையிலே நாலு முகங்களுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன். சக்கரங்களின் ரூபமும் அவைகளின் வேலையும் படிகபச்சை வருணமாயிருந்தது. அவைகளின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாப்போல் இருந்தது. அவைகள் ஓடுகையில் தங்கள் நாலு பக்கங்களிலும் ஓடும். ஓடுகையில் அவைகளின் வட்டங்கள் பயங்கரப்படத்தக்க உயரமாயிருந்தது. அந்த நாலு வட்டங்களும் கண்களால் நிறைந்திருந்தன. ஆவி போகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின. ஜீவனுடைய தலைகளின் மேல் பிரகாசிக்கத்தக்க வச்சிர பிரகாசமான மண்டலம் இருந்தது. அவைகள் செல்லும் போது அவைகளுடைய செட்டைகளின் இரைச்சலைக் கேட்டேன். அது பெருவெள்ளத்தின் இரைச்சலைப் போலிருந்தது. (எசேக் 1:15 – 24).

இங்கே எசேக்கியேல் தீர்க்கதரிசி ஒரு தரிசனத்தைக் காண்கிறான். இத்தரிசனம் ஒரு பறக்கும் அதிசயமான ஜீவனைப் பற்றியது. அவன் கண்ட தரிசனத்தை முற்றிலும் வர்ணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாவிட்டாலும் இயலுமான வரையிலும் வர்ணித்திருக்கிறான். ஆனால் அவன் கண்ட அந்த ஜீவன் எது என்று ஆவியானவரால் அவனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. "இதோ கேருபீன்களண்டையில் நாலு சக்கரங்கள் இருக்கக் கண்டேன்" (எசேக்கியேல் 10:9) இங்கே எசேக்கியேல் ஒன்றையே கண்டிருந்தான். "கேருபீன்மேல் ஏறி வேகமாய் சென்றார். காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார்". (சங்.18:10)

ஆகவே இந்த கேருபீன் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட விசேடமான ஜீவன். அது வட்டங்களைக் கொண்டுள்ளது. அந்த வட்டங்கள் கண்களால் நிறைந்துள்ளன. (வெளி 4:8). அதன் சத்தம் இரைச்சலைப் போன்றிருக்கிறது. அதன் மண்டலத்தின் நிறம் நீலம்" (எசேக்கியேல் 1:26). அன்று எசேக்கியேல் கண்ட தீர்க்கதரிசனம் இன்று மனிதர்கள் தாம் கண்டதாகச் சொல்கிற பறக்குந்தட்டுக்களைப் பற்றிய குறிப்புக்களோடு ஒத்துப்போகிறது. இப்போது நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். யார் இந்த சாத்தான்? மேலே கேருபீன் என்று குறிப்பிடப்படும் பரிசுத்த அந்த ஜீவன்களில் ஒன்றாக இருந்தவன். "நீ காப்பாற்றுகிறதற்காய் அபிஷேகப்பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும் உன் வழிகளில் குறையற்றிருந்தாய்" (எசேக் 28:14 –15). ஆகவே, இந்த சாத்தான் முன்பு தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட கேருபீன்களில் விசேடமான 'கேருப்'பாக இருந்திருக்கிறான். இவன் தான் படைக்கப்பட்ட விதத்தால் பெருமைப்பட்டு சிருஷ்டித்தவருக்கு மேலாகத் தன்னை உயர்த்தினதால் சபிக்கப்பட்டான். (ஏசாயா 14:12 –14). இவன் சபிக்கப்பட்ட போது இவனிலிருந்த அந்த கேருபீன்களுடைய வல்லமைகளும் இயல்புகளும் இவனிடத்திலிருந்து தேவன் எடுத்தாரா என்பதை நாம் அறியோம். தேவன் ஒருவரே அதை அறிவார். ஆனால் சாத்தான் தனக்கு கொஞ்ச காலம் மாத்திரம் உண்டென்று அறிந்தபடியால் மனுஷனைத் தனது தந்திரங்களால் வஞ்சிக்க சற்றும் தயங்கமாட்டான். மேலும் பவுல் வானமண்டலங்களில் இருக்கும் பொல்லாத ஆவிளைக் குறித்து இவ்வாறு எச்சரிக்கிறார். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாக தேவனுடைய சர்வ ஆயுத வர்க்கங்களைத் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல... இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களின் பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" (எபே6:11 –12). அதுமட்டுமல்லாமல் இயேசுகிறிஸ்து தமது வருகைக்கு முன்பு சம்பவிப்பவைகளைக் குறித்துச் சொல்லுவது போல"நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்... வானிலிருந்து பயங்கரமான தோற்றங்களும், பெரிய அடையாளங்களும் உண்டாகும்" (லூக்கா 21:8 –11)

ஆகவே, பறக்கும்தட்டு என்ற கடந்த 50 வருடங்களாக மனிதனைத் திசை திருப்பும் இந்த அதிசயப் பொருள் விஞ்ஞானிகளின் படைப்பா அல்லது சாத்தானின் வஞ்சக வேட்டையா என்பதை நாம் அறியோம். ஆனால் ஒன்றை மட்டும் தெளிவாக உணர வேண்டும். தேவன் பூமியில் மட்டுமே உயிரினங்களைச் சிருஷ்டித்தார். வேறு கிரகங்களில் அல்ல. ஆகவே நாம் வேதத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை என விசுவாசித்து, விசுவாசத்தில் சற்றும் கறையில்லாதவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் **"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்"** (11 பேதுரு 3:10)

**"இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவரும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரங்களெல்லோரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும். ஆமென்"**

(வெளி. 1:7)

மூலம் : இணையம், வேதாகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இன்று அறிவற்றவர்கள்?

இறையரசில் செல்வந்தர்களின் நிலை பற்றி லூக்கா பல உவமைகள் வாயிலாகப் பேசுகின்றார். குறிப்பாக செல்வரும் லாசருவும் (லூக்கா 16:19–31) அறிவற்ற செல்வர் உவமை (லூக்கா 12:13–21) ஆகிய உவமைகள் வாயிலாக உண்மைகளை உணர்த்துகின்றார். இங்கு ஆசிரியர் ஏன் அறிவற்றவர் என செல்வந்தரைக் குறிப்பிடுகின்றார் என ஆராய்வோம்.

உலகும் அதிலுள்ள நிறைவும் இறைவனுடையது என திருமறை கூறுகின்றது. (திருப்பாடல்கள் 24:1) அவரே மனித வாழ்விற்கு ஊற்று. (தொடக்க நூல் 2:7) இவ் உண்மைகளை மறந்து மதிகெட்டவன் போல் இறைவனின் இருப்புநிலையை நிராகரித்து தன் ஆன்மாவை நோக்கி உனக்காக அனைத்தையும் சேகரித்து வைத்துள்ளேன். நீ உண்டு உறங்கி திருப்தியாக வாழ்வாயாக என திருப்தி கொள்ளும் நிலையே அறிவற்ற செயலாகும். (லூக்கா 12:18–19). இந்நிலையிலேயே இறைவன் தன் இருப்பு நிலையையும் மனித வாழ்வில் தனது செல்வாக்கையும் மீளவும் உறுதிப்படுத்துகின்றார். (லூக்கா 12:20). மனித வாழ்வில் இறைவனின் இருப்புநிலையை மறந்து மனம்போன போக்கில் வாழ்பவர்கள் அறிவற்றவர்களே. விடுதலைப் பயணத்தில் மோசேயை நோக்கி கடவுள் யார்? அவருக்கு நான் ஏன் பணிந்து செயற்பட வேண்டும் என வினா எழுப்பும் பார்வோனும் அறிவற்றவனின் பட்டியலில் அங்கத்துவம் பெறுகின்றார். (விடுதலைப் பயணம் 5:2). அறிவற்றவர் இங்கு தனக்கு. தன்னுடையவைகள், தன் ஆன்மா போன்றவைகளைக் குறித்தே சிந்திக்கின்றார். (லூக்கா 12;18,19,20) தன்னுடையவைகளால் மற்றவர்கள் வாழ வைக்கப்பட வேண்டும் என்றோ பிறருடன் பகிர்ந்து வாழ வேண்டும் என்றோ இவன் சிந்திக்கவில்லை.எனவேதான் இவனை அறிவற்றவன் எனக் கூறுகின்றார். இறைவன் எம்மை ஆசீர்வதித்திருப்பதன் நோக்கம் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறவேண்டும் என்பதேயாகும் (தொடக்கநூல் 12:1–3).

ஜோன் வெஸ்லி அவர்கள் எவ்வாறு மற்றவர்களுடன் தனது அன்பைப் பகிர்ந்துகொண்டார் என்பதை பின்வரும் சம்பவங்கள் மூலம் மெய்ப்பிக்கின்றார். அவர் திருப்பணியாளராகக் கடமையாற்றிய போது அவருக்கு 30 பவுண்கள் ஊதியமாகக் கிடைத்தன. அதில் 22 பவுண் களைத் தனது தேவைக்காக பாவிப்பார். மிகுதி 8 பவுண்களை ஏனையவர்களின் நல்வாழ் விற்காக உபயோகிப்பார்.

மகாத்மாகாந்தி அவர்கள் ஒருநாள் புகையிரதத்தில் பிரயாணம் செய்யும் போது அவரது ஒரு செருப்பு தண்டவாளத்தில் தவறி விழுந்து விட்டது. அப்பொழுது மகாத்மாகாந்தி அவர்கள் தன்னிடமிருந்த மிகுதியான ஒரு செருப்பையும் எடுத்து வெளியே வீசிவிட்டார். அப்பொழுது அவருடைய நண்பர் மிகுதியாக இருந்த செருப்பை வெளியே ஏன் வீசினீர் என்று வினவியபோது யாராவது ஒருவர் எனது செருப்பால் பயன்பெற வேண்டுமாயின் என்னிடமுள்ள மிகுதியான செருப்பையும் வீசிவிட வேண்டும் எனப் பதிலளித்தார். மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்று சிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையை மேற்கூறிய இரண்டு உதாரணங்களும் எமக்குக் காண்பிக்கின்றன.

மனித வாழ்வில் நிகழ்கால வாழ்வைக் குறித்து இந்தச் செல்வந்தன் கவலைப்படுகின்றானேயொழிய, எதிர்கால வாழ்வைக் குறித்து எதுவும் சிந்திக்கவில்லைபோலும். தற்கால வாழ்விற்காக பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க முயற்சிக்கின்ற அதேவேளை நிரந்தர வாழ்விற்காக இவன் செயற்பட விரும்பாததன் காரணம் என்ன? நிகழ்கால வாழ்வில் எமது செயற்பாடுகளே எதிர்கால வழ்விற்கு அடித்தளங்களாக அமைகின்றன. முடிவில்லாத வாழ்வின் அனுபவம் செயல்களினாலேயே தீர்மானிக்கப்படும் என்ற உண்மையை உணர்ந்தும் செயற்படாமல் இருப்பது கவலை தரும் ஓர் செயற்பாடாகும். இதனாலேயே இவனை அறிவற்ற செல்வந்தர் என அழைக்கின்றனர்.

உலக வாழ்வில் நல்ல பங்கைத் தெரிந்தெடுக்க அவன் மறந்துவிட்டான். (லூக்கா 10:38-42). மனிதன் அப்பத்தினால் மாத்திரமன்றி கடவுளுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தையினால் உயிர்பிழைப்பான் என்ற உண்மையை உணர்ந்தும் அதற்கு அவன் முக்கியத்துவம் கொடுக்கவில்லை (லூக்கா 4:4). மேலும் நாளாந்த உணவுக்காக இறைவனில் தங்கியிருக்குமாறு ஆண்டவர் இயேசு போதித்த செபத்தை தனது வாழ்வில் நடைமுறைப்படுத்த இவன் தவறிவிட்டான் (லூக்கா 11:3). மேலும் என்னத்தை உண்போம் என்று வாழ்விற்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உடலுக்காகவும் கவலை கொள்ளாதிருங்கள். வானகப் பறவைகளைப் போஷிக்கும் ஆண்டவர் மனிதர் மீது கரிசனையுள்ளவராய் உள்ளார். அவர்களுக்கு வேண்டியவைகளை அவர் அளிக்கின்றார்.

ஆண்டவர் இயேசுவின் சீடனாக மாற வேண்டுமாயின் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடுக்குமாறு ஆண்டவர் இயேசு தன்னைப் பின்பற்ற விரும்பிய செல்வந்த வாலிபருக்கு அழைப்பு விடுக்கின்றார் (மாற்கு 10:17-22). இயேசுவின் சீடராக விரும்பும் ஒருவர் தனக்கு உண்டான அனைத்தையும் இழக்கும் அனுபவத்திற்கு ஊடாக செல்ல அழைக்கப்படுகின்றார். ஆனால் இந்த மனிதன் இயேசுவின் சீடனாக விரும்ப மறுத்து ஆஸ்திகளுக்கே முக்கியத்துவம் கொடுத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது.

அழிகின்றதில் அதிகம் நம்பிக்கை வைத்திருப்பவன் அழியாதவைகளில் நம்பிக்கை வைத்திருக்க மறப்பது கவலைதரும் காரியமாகும். மனிதன் உலகம் முழுவதையும் தன்னுடையதாக மாற்றிக் கொண்டாலும் தன் ஆன்மாவிற்குக் கேடு உண்டாக்கினால் அவனுக்கு ஐயோ! எனத் திருமறை கூறுகின்றது. எனவே. ஆன்மாவிற்குத் துரோகம் செய்த இம்மனிதன் அறிவற்றவன் என அழைக்கப்படுவதில் ஆச்சரியம் இல்லை (மாற்கு 8:36). இயேசு கூறிய இவ் உவமையில் கடவுளை மறந்து பகிர்வு வாழ்வின் முக்கியத்துவத்தை மறுதலித்து, எதிர்கால வாழ்வின் சிறப்பையும் நிரந்தரத் தன்மையையும் மறந்து அழிகின்றவைகளில் அதிகம் நம்பிக்கை வைத்து செயற்பட்ட இம்மனிதனை நோக்கி, கடவுள் தனது இருப்பு நிலையை அவனுக்கு உணர்த்தி எல்லாவற்றின் மேலும் தனக்கு இருக்கும் அதிகாரத்தை உறுதிப்படுத்துகின்றார். இன்று இரவு உன் ஆன்மா உன்னை விட்டு எடுபடுமானால் நீ சேகரித்து வைத்துள்ளவைகள் அனைத்தும் யாருடையவைகளாக மாறும் என இயேசு எழுப்பிய வினாவிற்கு பதிலற்று பரிதவிக்கின்றான் இம்மனிதன். இவனைப் போல வாழும் அனைத்து மனிதர்களையும் சமுகத்தையும் திருச்சபைகளையும் தேசத்தையும் பார்த்து இறைவன் இவ்வினாவையே எழுப்பி நிற்கின்றார்.

**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி,
பிலிமத்தலாவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்..." – (மத்தேயு 25:36)

# பரந்தனை நோக்கிய பிரயாணம்...


கடந்த 23ம் திகதி மட்டக்களப்பு கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்திலிருந்து நானும் எனது மனைவி மகளுமாக வன்னி பிரதேசத்தில் வாழும் மக்களுக்காக சேகரித்த ஆடைகளுடன் புறப்பட்டோம். இரவு நேரப் பிரயாணம், கடும் மழையினால் மிக மோச மான நிலையில் காணப்பட்ட பாதை கள், பாதை மருங்குகளிளெல்லாம் வெள்ளம்; தற்காலிக கூடாரங்களிலும் உடைந்த கட்டடங்களிலும் மரங்களுக்குக் கீழாகவும் மக்கள். இவை எல்லாவற்றிற்கும் நடுவில் எமது பிரயாணம் தொடர்ந்தது.

24ம் திகதி டிசம்பர் மாதம் காலை 7 மணியளவில் 'பரந்தன்' மெதடிஸ்த ஆலயத்தைச் சென்றடைந்தோம்.





மன்னாரில் ஆசிரியையாக கடமைபுரியும் மனைவி, 1½ வயது சிறிய மகளுடன் ஆலயத்தின் பிற்பகுதியில் காணப்படும் சிறிய கூடாரத்துள் அருட்திரு செபமாலை பிரின் சன் அவர்களைச் சென்று சந்தித்தோம். பரந்தன் ஆலயமானது பல மாதங்களுக்கு முன் அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திலன்றி தற்காலிக கட்டடத்திற்குள் அமைந்திருக்கின்றது.




ஆலய கட்டடமேயன்றி ஏனைய வளவு அனைத்துமே வெள்ளத்தாலும், புற்களாலும், கற் களாலும் காணப்பட்டது மிக வேதனையைத் தந்தது.

வன்னிப் பிரதேசத்தில் மெதடிஸ்த திருச்ச பையின் 2 குருவானவர்கள் உட்பட 6 தேவ ஊழி யர்கள் 9 இடங்களில் ஆராதனைகளை நடாத்தி வருகின்றனர். மிகக் கஷ்டமான சூழ்நிலைகளை மிகச் சகிப்புடனும் பொறுமையுடனும் கர்த்தருக் காய் செய்து வருகின்றனர். முழங்காலளவு தண்ணீரிலும், வெள்ளத்திலும் திறந்த வானம் ஆலயங்களிலும் மழையிலும் குளிரிலும் ஆராதனைகள், ஓய்வுநாட் பாடசாலைகள், மாலைநேரப் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. அருட்திரு பிரின்சன் அவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று நாம் கொண்டு சென்ற ஆடைகளையும் கொப்பி, புத்தகங்களையும் கையளித்தோம். இவ்வாடைகள் இங்குள்ள ஊழியர்களூடாக மக்களைச் சென்றடைந்து வருகின்றது. மக்களை நேரடியாக சந்திக்க வாஞ்சையிருந்தும் சந்திக்க முடியாத சூழ்நிலைகள்; காலநிலை; மக்கள் ஒன்றுகூட முடியாத பாதைப் போக்குவரத்து நிலவரம்; அப்படிக் கூடினாலும் அவர்களது எண்ணற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வுதவிகள் எம்மாத்திரம் என்கிற வேதனை! ஆதங்கம்!



'வாலிபன்' ஊழியத்தினூடாக தொடர்ந்து வரும் நாட்களில் இன்னும் பல உதவி நடவடிக்கைகளை செய்யும்படியாக ஆயத்தப்பட்டுக்கொண்டு வருகிறோம். வாஞ்சையுள்ளவர்கள், ஏவப்படுபவர்கள் உங்களது கரங்களையும் இணைத்துக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

**மனம்விட்டு உங்களோடு....**

மேலும், இப்பிரதேசத்தில் நடைபெறும் எமது ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்; ஏனெனில், ஜெபம் ஜெயத்தைக் கொண்டுவரும். உண்மையாகவே இப்பிரதேசத்தில் செய்யபப்டும் மெதடிஸ்த மிஷன் ஊழியங்களுக்கும் உங்களுக்கும் நடுவராக ஒரு பாலமாக 'வாலிபன் ஊழியங்கள்' இயங்கவே வாஞ்சிக்கின்றோம்; இதற்காக பல ஜெபக் குழுக்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். உதவிகள் சரியான நபருக்கு உரிய நேரத்தில் சென்றடையப் பிரயாசப்படுகின்றோம். தேசங்களிளெல்லாம் பரந்து வாழும் எமது ஜனங் கள் இவ்வூழியத்தை தியாகத்தோடு தாங்க வேண்டி நிற்கிறோம்.



கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்

**சகோ.டானியல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நேசர் நீர்தானையா!!!

(சங். 40:1, உபா.1:31, I பேது.4:16, யோவா. 16:33,
ஏசா.43:2, எண்.23:19, யோபு 33:14)



மனதுருக்கம் உள்ளவரே... என்னை
'மகளே' என்று அழைத்தவரே
எனதுள்ளம் புரிந்தீரே – என்றும்
கனப்படுத்தி மகிழ்ந்தீரே...

காத்திருந்த வேளையெல்லாம் – என்னை
கனிவோடு நோக்கினீரே
சோர்ந்திருந்த நாட்களெல்லாம் – உமது
தோளின் மீது சுமந்தீரையா...

உலகத்தின் பாரங்களை – நான்
உமக்காக சகித்தேனையா / சகிப்பேனையா
உபத்திரவ பாதையிலே – என்றும்
உம் அன்பால் வாழ்வேனையா...

தண்ணீர்களைக் கடக்கையிலே – நான்
தவறிவிழாது காத்தீரையா
எண்ணிலடங்கா சோதனையில் – என்னை
ஏந்தி ஏந்தி சுமந்தீரையா...!

இஸ்ரவேலின் தேவனவர் – என்றும்
சொன்ன வார்த்தை தவறுவீரோ...??
இரண்டாம் விசை பார்த்து திருத்துவீரோ...??
இல்லை... அய்யா...!
இறுதிமட்டும் மாறாதவர் நீர் ஒருவர் தானையா...
என் அன்பு நேசர் நீர்தானையா...!!!

–J.டெய்சி–
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபை FM
Messenger of God's Grace
www.kirubaifm.com

24
மணி நேர
சுவிசேஷ
இணைய
வானொலி
www.kirubaifm.com

# கிருபை FM

உலக தமிழ் சுவிசேஷ வானொலிகளில் முதல் தரம் நோக்கி...

உங்கள் இதயம் கவர்ந்த பாடல்களுடன் இணையம் வாயிலாக இல்லம் தேடி வருகிறது.... கிருபை FM

இணையம் BOR அடிக்குதா? FACEBOOK வெறுத்திருச்சா? கேளுங்கள்

## கிருபை FM

நேயர் மனம் கொள்ளை கொண்ட எங்கள் கலையக நிகழ்ச்சிகள்

- காலை தியானம்
- வாலிபர் நேரம்
- அறுசுவை கதம்ப நிகழ்ச்சி
- பெண்ணே உனக்கா
- என்றும் இனியவை
- பல தேவ ஊழியர்களின் வல்லமையான செய்திகள்

இன்றே...
இணைய உலா...
உங்கள் கிருபை FM முடன்.
www.kirubaifm.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**SMS க்கான இலக்கங்கள் :**

**077-7813269, 077-2335106,**

**0779-584930, 077-7718847**

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு **கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்** இடம்பெறும்.

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும்,
அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய்
எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய்
வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும்,
சபைகளையும் நிரப்புவதாக!

## மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம் - கோட்டைமுனை.


கடிதத் தொடர்புகளுக்கு :

**ஆசிரியர்,**

**"வாலிபன்" சஞ்சிகை,**

மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை.

மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com



சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org